முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி

நாள்: 05.12.2023 இநிமாஎண். 39/2018 நிம.எண். 11/2017 மசா1 பாப்பு(எ) ராமராஜ்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணைதொடர்ச்சி

11) வழக்கு சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்பதை காட்டுவதற்கு ஆவணம் எதுவும்தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எவ்வாறு சொத்து எனக்கு வந்தது என்றால் பாகப்படி எனக்கு கிடைத்தது.

12) எந்த வருடம் பாகம் நடைபெற்றது என்றால் 1986 ம் வருடம் நடைபெற்றது. அந்த 1986 ம் ஆண்டு பாகப்பத்திரத்தை ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல.

13) மசாஆ 8 ஆவணம் எனது தகப்பனார் பாப்பம்மாளுக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் என்றால் சரிதான். மசாஆ 8 ல் கண்ட சொத்து வழக்கு சொத்திற்கு அடுத்த சொத்து என்றால் சரிதான்.

14) அசல்வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பின் விபரத்தை தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். சுப்புலட்சுமி சில ஆவணங்களை சமர்ப்பித்து தான் தீர்ப்பு பெற்று ள்ளார் என்றால் சரியல்ல.

15) சின்னம்மாள் சுப்புலட்சுமியின் தாயார் என்றால் சரிதான். வழக்கு சொத்தை சின்னம்மாள் 1953 ம் ஆண்டு வழக்கு சொத்தை கிரையம் பெற்றார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

16) சின்னம்மாள் சொத்தை சுப்புலட்சுமிக்கு கிரையம் கொடுத்த விபரம் தெரியுமா என்றால் தெரியாது. சுப்புலட்சுமி கிரையம் பெற்றதில் இருந்து வரிவகையறாக்களை செலுத்தி அனுபவித்து வரும் சங்கதி தெரியுமா என்றால் தெரியாது.

17) 1986 ம் ஆண்டில் இருந்து சுப்புலட்சுமி பெயரிலும் ஆறுமுகதேவர் பெயரிலும் வீட்டுவரி இருந்து செலுத்தி வந்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

18) நான் யாருடைய சொத்திற்கு வீட்டு வரி செலுத்தியுள்ளேன் என்றால் எனது தகப்பனார் சுப்பையாதேவர் பெயரிலான சொத்திற்கு வீட்டுவரி செலுத்தியுள்ளேன். சுப்புலட்சுமி பெயரிலான சொத்திற்கு வீட்டுவரி செலுத்தவில்லை என்றால் சரிதான்.

19) எந்த கதவு எண்ணிற்கு வீட்டுவரி செலுத்தினேன் என்றால் 2/19 க்கு செலுத்தினேன். நான் சொத்து வரி செலுத்தும் சொத்திற்கும் சுப்புலட்சுமி சொத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

20) மசாஆ.11 முதல் மசாஆ.13 வரையிலான ஆவணங்களுக்கும் வழக்கு சொத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

21) வாதி சுப்புலட்சுமி தாக்கல் செய்த அவஎண்.331/1984 ல் நான் 6ம் பிரதிவாதி என்றால் சரிதான். அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றும், அதற்கு எதிராக தாக்கல் செய்ய்பபட்ட மேல்முறையீடு எண்.38/1987ம் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான்.

22) அந்த அவஎண்.331/1984 ல் வழங்கப்பட்ட தீர்ப்பில் அந்த சொத்தில் எனக்கு உரிமை உள்ளது என்று எவ்வித முடிவையும் நீதிமன்றம் சொல்லவில்லை என்றால் சரிதான்.

23) அந்த அவஎண்.331/1984 ல் எனது தரப்பில் எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை என்றும் மேலும் வாதிக்கு அந்த சொத்தில் உரிமை இல்லை என்று வழக்கு தள்ளுபடி செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

24) எனது சொத்தின் நான்கு எல்லைகள் என்ன என்றால் மேபுறம் ஊர்கவுண்டர் மணியின் வீடு, தென்புறம் காலியிடம், கிழபுறம் ராமாத்தாள் இடம், வடபுறம் கிழமேல் ரோடு. அந்த கிழபுற சொத்தின் உரிமையாளர் ராமாத்தாள் யார் என்றால் சுப்புலட்சுமியின் சகோதரி.

25) மேற்கண்ட நான்கு எல்லைகளுக்குள் கண்ட சொத்தை பொறுத்து தான் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

26) நிறைவேற்று மனுவின் பெயரில் வாதி சுப்புலட்சுமி சொத்தின் சுவாதீனத்தை எடுத்தார் என்றால் சரிதான். வாரண்ட்டில் தவறாக குறிப்பிடப்பட்டதால் தவறுதலாக 9 செண்ட் நிலத்தின் சுவாதீனம் சுப்புலட்சுமியிடம் கொடுக்கப்பட்டது என்றும் ஆகவே சுப்புலட்சுமியின் 9 செண்ட்டின் சுவாதீனத்தை மீண்டும் கோர்ட்டில் ஒப்படைத்து விட்டார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

27) சுவாதீனம் மறு ஒப்படைப்பு செய்ய்பபட்ட பிறகும் அசல்வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையை ரத்து செய்வதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல.

28) சுப்புலட்சுமி மீது 1984ம் ஆண்டில் இருந்து கொண்டுள்ள பகையை வைத்துபொய்யான இம்மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு

சொத்தில் எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும் ஆகவே வாதி சுப்புலட்சுமி சுவாதீனம் எடுப்பதை தடைசெய்வதற்கு எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் தவறு. ஆகவே நான் தாக்கல் செய்துள்ள மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஒப்பம் ( பாப்பு(எ) ராமராஜ் )